**ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 140 நாட்கள் தாமதத்துடன் 2022 யூலை 18 இல் | கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் M/s Ernst & Young ஆல் கணக்காய்வு செய்யப்பட்ட ஹோட்டல் செயற்பாட்டின் கணக்காய்வு செய்யப்பட்ட | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கம்பனியால் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த முறை, கணக்காய்வின் போது கொவிட் 19 இற்கு சாதகமாக சோதனையிடப்பட்ட ஒரு சில உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருந்ததால் கணக்காய்வை இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டது, |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 957,226,000 தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 918,107,000 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 39,119,000 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிதிக்கிரயம் ரூபா 91,908,000 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 முதல் 2021 வரையிலான கம்பனியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|
| | HDL | HDL | HDL | HDL |
| மொத்தலாப விகிதம் % | 22 | 25 | 51 | 51 |
| தேறியலாப/(நட்ட) விகிதம் % | (83) | (81) | (11) | (4) |
| வருமான செலவின விகிதம் % | 97 | 106 | 59 | 56 |
| நடைமுறை விகிதம் | 0.47 | 0.34 | 0.94 | 0.79 |

கம்பனியின் மொத்தலாபம் 2018 முதல் 2021 வரை 51 சதவீதத்திலிருந்து 22 சதவீதம் வரை தொடர்ச்சியாக குறைவடைந்த அதேநேரம் தேறிய நட்ட விகிதத்தை கருத்தில் கொள்ளும் போது அதே காலப்பகுதியில் 4 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. வருமானத்துடன் ஒப்பிடும்போது செலவினங்களும் 56 சதவீதத்தில் இருந்து 97 சதவீதம் வரை அதிகரித்துள்ளன. அதே நேரம் நடைமுறை விகிதம் 2018 இல் 0.79 ஆகவும், 2021 இல் 0.47 ஆகவும் இருந்தது, இது கம்பனியின் சாதகமற்ற தொழிற்படு மூலதனத்தைக் குறிக்கிறது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டு முதல் சனாதிபதி செயலகத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 493,167 தொகை மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | இந்த விடயம் பல தடவைகள் சபை மட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், ஹோட்டல் இது தொடர்பில் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. 2014 இல் குறித்த கொடுக்கல்வாங்கலிற்கு பின்னர் ஹோட்டல் சனாதிபதி செயலகத்தில் பல நிகழ்வுகளிற்கு உணவு வழங்கியுள்ளது, அதற்காக ஒழுங்கான அடிப்படையில் தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அரசாங்க நிறுவனங்களிடமிருந்து நிலுவைகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு முயற்சிகள் தேவைப்படுகின்றது. |
| (ஆ) | 250 விருந்தினர் அறைகளை மறுசீரமைப்பதற்கும், சீன உணவகத்தை நிர்மாணிப்பதற்கும், கம்பனி 2021 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 1,098.4 மில்லியன் காலக் கடன் வசதியைப் பெற்றுள்ளது. எடுக்கப்பட்ட தொகையில், ரூபா 553 மில்லியன் தொகை மாத்திரம் குறித்த மறுசீரமைப்பு நோக்கத்திற்காக செலவிடப்பட்டிருந்தது, அதே சமயம் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள், ஹில்டன் கொழும்பின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு, மேலதிகப்பற்று வசதியின் தீர்ப்பனவு மற்றும் பெறப்பட்ட காலக் கடன் மற்றும் மேலதிகப்பற்று வசதிகள் இரண்டினதும் வட்டிக் கொடுப்பனவுகள் ஆகியவற்றிற்காக ரூபா 445.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. | கொவிட் 19 தொற்றுநோயினால் ஹோட்டல் செயற்பாட்டில் ஏற்பட்ட கணிசமான தாக்கம் காரணமாக, செயற்பாட்டுச் செலவினங்களுக்கான தொழிற்படு மூலதனமாக கணிசமான தொகை வழங்கப்பட்டுள்ளது, மேலும் ஹோட்டல் செயற்பாடு இயல்பாக்கப்பட்டவுடன் பிற்போடப்பட்ட அறவீட்டுடன் வசதி வழங்கப்பட்டது. | பெறப்பட்ட காலக்கடன் அதன் நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 7,821,569,000 ஆக இருந்ததுடன் இது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 8,808,317,000 வரை அதிகரித்துள்ளது. அதே சமயம், ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு கம்பனியின் சாதகமற்ற தொழிற்படு மூலதனம் ரூபா 997,068,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இது ரூபா 1,059,237,000 வரை அதிகரித்திருந்தது. 2011 இன் 43 ஆம் இலக்க குறைவான செயற்திறன் கொண்ட நிறுவனங்கள் அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் HDL இன் அனைத்து பங்குகளும் திறைசேரி செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அது ஒப்படைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின்னரும் பங்குதாரருக்கு எந்த வருமானமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உயிர்த்த் ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய்களின் விளைவுகளால் சுற்றுலாத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டதன் காரணமாக 2019 முதல் 2021 வரையான ஆண்டு விதிவிலக்கான ஆண்டுகளாகும். அதற்கு முன்னர், ஹோட்டல் ஒரு இலாபம் ஈட்டும் முயற்சியாக இருந்ததுடன் அத்தகைய இலாபங்கள் ஐந்தொகையில் கடன் வெளிப்பாடு ஒன்றாக இல்லாமல் கட்டம் 01 புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக பயன்படுத்தப்பட்டன. தற்போது அறை புனரமைப்பு பூர்த்தியடைந்ததும் ஹோட்டல் மீண்டும் 2023 முதல் இலாபகரமான முயற்சியாக மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | இலாபகரமான முயற்சிகளை நோக்கி அதன் திசையை விரைவுபடுத்துதல் மற்றும் தொழிற்படு மூலதனத்தை முகாமை செய்தல் வேண்டும். |